செ.வெ.எண்:29 நாள்:11.10.2021

முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு கல்வி உதவித் தொகைக்காக இணையதளம் வாயிலாக விண்ணப்பிக் ககால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது
மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

மத்திய முப்படைவீரர் வாரியம் புதுதில்லி வாயிலாக முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு அமைச்சரின் விருப்புரிமை நிதியிலிருந்து (RMEWF) வழங்கப்படும் கல்வி உதவித்தொகை 2020-2021-ம் கல்வியாண்டில் 1 முதல் 12-ம் வகுப்பு வரை பயின்ற முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் www.ksb.gov.in என்ற இணையதளத்தில் 30.10.2021 வரை விண்ணப்பத்திட தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது 30.11.2021 வரை விண்ணப்பித்திட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனவே விண்ணப்பித்து பயனடையுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு உதவி இயக்குநர் முன்னாள் படைவீரர் நலன் தூத்துக்குடி, அவர்களை நேரில் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.